**“வாழ்கைத் துணைக்கு கொடுக்கும் அளவிற்கான முக்கியத்துவத்தை மருத்துவர்கள் நோயாளிகளுக்கு கொடுக்க வேண்டும்”- வேலம்மாள் மருத்துவமனை வளாக ஐடா ஸ்கட்டரில் வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் நடந்த மருத்துவ மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி பரிசளிப்பு விழாவில் அரவிந்த் கண் மருத்துவமனை துணைத் தலைவர் திருமதி.நாச்சியார் பேசினார்.**

வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் கடந்த ஆகஸ்டு மாதம் அனைத்து மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. நம் மனித சமூகத்திற்கு மகத்தான தொண்டாற்றிய ஒன்பது சமுதாய அக்கறையாளர்கள் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிக்கு மிகுந்த வரவேற்பு இருந்தது. அன்னை தெரசா, சர்தார் வல்லபாய் படேல், லால் பகதூர் சாஸ்திரி, கர்னல் ஜான் பென்னிகுக், வள்ளல் பாண்டித்துரைத் தேவர், ப்ளோரன்ஸ் நைட்டிங்கேல், வ.உ.சிதம்பரம் பிள்ளை, ஐடா ஸ்கட்டர் மற்றும் வள்ளல் டாக்டர்.அழகப்பச் செட்டியார் ஆகியோர் ஆற்றிய மொழி, கல்வி, மருத்துவம் மற்றும் அரசியல் பணிகளைப் போற்றும் விதமாக இந்தக் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது. மருத்துவ மாணவர்களின் இலக்கிய திறனையும் வளர்க்கும் விதமாக வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் இந்த போட்டிகள் நடத்தப்பட்டது. இந்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ஒரு லட்ச ரூபாயும், இரண்டாம் பரிசாக 75ஆயிரம் ரூபாயும், மூன்றாவது பரிசாக ஐம்பதாயிரம் ரூபாயும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பரிசுகள் அறிவிக்கப்பட்டது. தமிழகம் மட்டுமின்றி அண்டைமாநிலங்களிலுள்ள மருத்துவக் கல்லூரிகளிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் அதிகளவில் கட்டுரைகளை அனுப்பியிருந்தனர். மிகவும் தேர்ந்த தமிழறிஞர்களைக் கொண்டு இந்த கட்டுரைகள் மதீப்பீடு செய்யப்பட்டு முதல் மூன்று இடங்களைத் தேர்வு செய்தனர்.

இதற்கான பரிசளிப்பு விழா இன்று(28.10.17) வேலம்மாள் மருத்துவமனை வளாகத்தில் உள்ள ஐடா ஸ்கட்டர் முற்றிலும் குளிரூட்டப்பட்ட பிராமாண்ட அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை துணைத் தலைவர் திருமதி.நாச்சியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் வேலம்மாள் கல்வி அறக்கட்டளைத் தலைவர் திரு.எம்.வி.முத்துராமலிங்கம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மதுரை பேராசியரும் சிறந்த பேச்சாளருமான திரு.கு.ஞானசம்பந்தம் மற்றும் பட்டிமன்ற பேச்சாளர் திருமதி.பாரதிபாஸ்கர் ஆகியோர் சிறப்பு பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

வேலம்மாள் கல்விக் குழுமத் தலைவர் திரு.எம்.வி.முத்துராமலிங்கம் அவர்கள் பேசுகையில், “தெய்வத்திற்கு நிகராக மதிக்கப்படும் மருத்துவர்கள் மேற்கொண்டுள்ள பணி மகத்தானது என்றும், தற்போதைய மருத்துவ மாணவர்கள் மருத்துவ அறிவியலுடன் தாங்கள் சார்ந்துள்ள சமூகத்திற்கு மகத்தான தொண்டாற்றியவர்கள் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தே இது போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு பெரும் பொருள் செலவில் இந்த பரிசளிப்பு விழாவும் நடத்தப்படுகிறது என இவ்விழாவின் நோக்கம் குறித்து கூறினார். மேலும் அந்த மகத்தான மனிதர்களின் தியாகம், சேவை குறித்து தாங்கள் அறிந்து கொள்வதுடன் வருங்கால தலைமுறைகளும் தெரிந்து கொள்ளும்படி செய்திடல் வேண்டும்” என்றார்.

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைத் துணைத் தலைவர் திருமதி.நாச்சியார் அவர்கள் பேசுகையில், “மருத்துவர்களின் பணி என்பது வைத்தியம் பார்ப்பதுமட்மல்ல என்றும், நோயாளிகளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் அவர்களிடம் மென்மையாக பேசுவதுடன் நோயின் தன்மை குறித்து வெளிப்படையாக எடுத்துக் கூறுதல் அவசியம் என்றார். ஒருவர் தன் வாழ்கைத் துணைக்கு எந்தளவிற்கு முக்கியத்துவமும், அன்பும் கொண்டிருப்பார்களோ அந்தளவிற்கு ஒரு

மருத்துவர் தனது நோயாளியை நடத்த வேண்டும் என்றார். மருத்துவ தொழில் ஒன்று மட்டுமே பணம் சம்பாதிப்பதுடன் புண்ணியமும் சம்பாதிக்கும் தொழிலாக அமைந்துள்ளது என்றார். மேலும், என்னதான் நவீன மருத்துவ உபகரணங்கள், பல்வேறு பட்ட மேற்படிப்புகள் கற்றுத் தேறியிருந்தாலும் மருத்துவர்கள் அடிப்படையில் நல்ல மனோபாவம் (Attitude) உடையவராயிருந்தால்தான் இந்தத் தொழிலில் அவர் வெற்றி பெற முடியும் என்றார். தற்போது வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவர்கள், செவிலியர்கள் முதல் வரவேற்பறை, மருந்தகம் மற்றும் சிற்றுண்டிச் சாலைப் பணியாளர்களின் கனிவான அணுகுமுறை, துப்பரவு பணியாளர்கள் வரை அனைவருமே நேர்த்தியுடனும், பொறுப்புணர்வுடனும் தங்கள் பணியினை மேற்கொண்டு நோயாளிகளின் தேவையறிந்து பூர்த்தி செய்து வருவதால்தான் வேலம்மாள் மருத்துவமனை இத்தகைய மகத்தான வளர்ச்சியை குறுகிய காலத்ததில் பெற்றுள்ளதாகவும், இன்னும் பத்து, பதிணைந்து ஆண்டுகளில் இந்த வேலம்மாள் மருத்துவமனையானது அளப்பறிய வளர்ச்சியைத் தொடும்” என்றும் வாழ்த்தினார்.

சிறப்பு பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்த பேராசியர் கு.ஞானசம்பந்தம் தனக்கே உரித்தான நகைச்சுவை உணர்வுடன் மருத்துவர்களின் சேவை குறித்தும். கட்டுரையின் கருப்பொருளான ஒன்பது சமுதாய அக்கறையாளர்கள் குறித்தும் பேசினார்.

பட்டிமன்ற பேச்சாளரான திருமதி.பாரதி பாஸ்கர் சமுதாய அக்கறையாளர்களின் தியாகத்தையும், தன்னலமற்ற வாழ்கை முறையினையும், வருங்கால மருத்துவ மாணவர்கள் முன்னுதாரணமாய் எடுத்துக் கொள்ள வேண்டியது குறித்தும் பேசினார்.

பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் முதல் இடத்தை வென்ற பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவான் மருத்துவக்கல்லூரி இறுதியாண்டு மாணவி ஆர்.ஐஸ்வர்யாவிற்கு ஒரு லட்ச ரூபாய்க்கான காசோலையை அரவிந்த் கண் மருத்துவமனையின் துணைத் தலைவர் திருமதி.நாச்சியார் வழங்கினார். இதே போன்று இரண்டாமிடத்தை வென்ற மதுரை வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மூன்றாம் ஆண்டு மாணவி கே.ஹரிதாவிற்கு 75ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும், மூன்றாமிடத்தை வென்ற நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மாணவி எம்.மதிகாவிற்கு ஐம்பதாயிரம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது. இதுமட்டுமின்றி பல்வேறு தடகளப் போட்டிகளில் வெற்றிபெற்ற வேலம்மாள் மருத்துவ மாணவர்களுக்கு வேலம்மாள் கல்வி குழுமத்தலைவர் திரு.எம்.வி.முத்துராமலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டது.

இறுதியில் வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டீன்.ஆர்.எம்.ராஜாமுத்தையா அனைவருக்கும் நன்றி தொவித்தார். இந்த விழாவில் ஏராளமான மருத்துவர்கள், மருத்துவக்கல்லூரி, செவிலியர்கள் பள்ளி மாணவியர் மற்றும் வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தலைமை நிர்வாக அதிகாரி திருமணிவண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த விழாவிற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் வேலம்மாள் கல்விக் குழுமத்தின் துணைத் தலைவர் திரு.கணேஷ் நடராஜன் செய்திருந்தார்.

**புகைப்பட விளக்கம் :** வேலம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் நடத்தப்பட்ட மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற பெரம்பலூர் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவக்கல்லூரி இறுதி ஆண்டு மாணவி ஆர்.ஐஸ்வர்யாவிற்கு அரவிந்த் கண் மருத்துவமனைத் துணைத் தலைவர் திருமதி.நாச்சியார் மற்றும் வேலம்மாள் கல்வி அறக்கட்டளைத் தலைவர் திரு.எம்.வி.முத்துராமலிங்கம் ஆகியோர் ஒரு லட்ச ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். அருகில் (இடமிருந்து வலமாக) பட்டிமன்ற பேச்சாளர் திருமதி.பாரதிபாஸ்கர், பேராசிரியர் கு.ஞானசம்பந்தம், வேலம்மாள் மருத்துவமனை டீன் டாக்டர்.ஆர்.எம்.ராஜாமுத்தையா ஆகியோர் உள்ளனர்.




மருத்துவ மாணவர்களுக்கான மாபெரும் கட்டுரைப் போட்டி - பரிசளிப்பு விழா (28.10.17)